Pettai Mosque and Krishnapuram Temple.

* 97. Q Dr. T.R. JANARTHANAM (on behalf of Thiru J.M. Miakhan): Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state:

(a) whether the Government of Tamil Nadu have identified "Pettai Mosque" in Tirunelveli and "Krishnapuram Temple" on Tirunelveli-Tuticorin Road, as Tourist Centres of the State; and

(b) if not, whether the Government will come forward to identify them as such in view of their unique paintings and stone carvings?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: (அ) மற்றும் (இ) இல்லை.

Incentive Increment for M. Ed. Qualification.

*98 Q Dr. T.R. JANARTHANAM (on behalf of Thiru P. R. Thomas): Will the Hon. the Miniser for Education be pleased to State —

(a) whether it is a fact that there is a demand from Graduate Teachers' Association to award incentive increments to Post-Graduate Assistants in Higher Secondary Schools, when they acquire M. Ed. qualification; and

(b) if so, the action proposed to be taken thereon?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதிக்கு மேல் அதிகமாக பட்டப் படிப்பு படித்தவர்களுக்கு கூடுதல் ஊதிய உயர்வு (Advanced increment) அளிப்பதற்குப் பதிலாக ஊக்குவிப்புத் தொகை (incentive increment) அளிப்பது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது.

செல்வி ஆ. லீலாவதி: தலைவர் அவர்களே, அரசாணை எண் எம். எஸ். 107, தேதி 20—1—1976-படி தமிழ் ஆசிரியர் பணிக்காலத்தில் எம்.ஏ. பட்டத் தேர்வுக்கு ஒரு ஊக்க ஊதிய உயர்வும் பி.எட். பட்டத் தேர்வுக்கு இன்னொரு ஊக்க ஊதியமுமாக இரண்டு முறை ஊக்க ஊதிய உயர்வு தரப்படுகிறது; எம்.எஸ். 173, தேதி 30—9—1980-படி உயர்நிலைப் பள்ளி விதிகள் அனைத்தும் மேல்நிலைப் பள்ளிகளுக்குப் பொருந்தும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே அரசு இனிமேலாவது இந்த விதிப்படி முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதியம் அளிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, புதிய திட்டத்தைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். அதுகுறித்து முடிவு எடுத்த பிறகு அதன் தொடர்பில்தான் இதைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டும்.